நூல்களை ஏற்றுக்கொள்ளலாம், எவற்றைத் தள்ளலாம், எவை புதுமை யாக உள்ளன, எந்தளவிற்கு உதவி செய்யலாம் என்று கண்டறிந்து அதற்கேற்றபடி உதவி செய்ய பரிந்துரை செய்கிறார்கள். அதை அரசு ஏற்று அதற்கு ஓரளவு உதவி செய்துகொண்டு வருகிறது.

தஞ்சை மருத்துவ மனை

*186 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செயது கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலுள்ள பி வகுப்பு அறைகளில் குளிக்கும் அறைகளை இணைத்திடும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்தில் குடிநீர் வழங்கு திட்டங்கள்.

*187 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம் சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்தில் குடிதண்ணீர் வாரியத்தின் மூலமாக 1972-73, 1973-74 ஆகிய வருடங் களுக்கு எத்தனை கிராமங்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டு அல்லது வழங்கப்பட உள்ளது.

(இ) அதன் மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) 1972-73, 1973-74 ஆகிய ஆண்டுகளில் திட்டங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. வரப்போகிற நிதியாண்டுகளில் திட்டங்களை எடுத்துக்கொள்ள முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(இ) இவ்வினாவுக்கு இடமில்லை.

திரு. த. சோனையா: சிவகங்கை பகுதி தண்ணீர் வறட்சியான பகுதி. அங்கு குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் கிராம மக்கள் கஷ்டப்படு கிறார்கள். ஆகவே, அரசு அந்தப் பகுதிக்கு வருகிற ஆண்டிலாவது குடிதண்ணீர் கொண்டு வருவதற்குச் செயல்பட இருக்கிற திட்டங்களை விரைவில் கொஞ்சம் வேகமாகக் கொண்டுவர முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: வறட்சியான சிவகங்கைப் பகுதி பற்றி உறுப்பினர் அவர்கள் வலியுறுத்திச் சொல்கிறார்கள். வறட்சி குறைவாக இருக்கிற திருப்புவனம் பகுதிக்கும் குடிதண்ணீர் அவசியம் வேண்டுமென்று கருதுகிறார்கள். அதேபோல் தமிழ் நாட்டிற்கு முழுவதும் த்திட்டங்கள் பரவலாக தேவைப் படுகிறது. அதில் சிவகங்கை ஊராட்சி

1974 சனவரி 28]

ஒன்றியப் பகுதிக்கு, ஏறத்தாழ 41 கிராமப் பகுதிகளுக்கு குடிதண்ணீர் வழங்கவேண்டும் என்று திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் இசைவை —அவர்கள் தருகிற திட்டம் என்ற அடிப்படையில்— கோரி அனுப்பப் பட்டிருக்கிறது. அவர்கள் 13, 14 தொகுப்புகளில் மூன்று, நான்கு தொகுப்புகளைத்தான் ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் அப்படி ஏற்றுக்கொள்கிற வேகத்தைப் பொறுத்து இத் திட்டங்களைச் செயல் படுத்தமுடியும்.

நரிக்குடி ஒன்றியத்தில் குடிநீர் வழங்கு திட்டங்கள்

*188 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா ?

(அ) இராமநாதபுரம் மாவட்டம், நரிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் குடிதண்ணீர் வாரியத்தின் மூலமாக 1972-73, 1973-74 ஆகிய வருடங் களுக்கு எத்தனை கிராமங்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டு அல்லது வழங்கப்பட உள்ளது ?

(இ) அதன் மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 1972-73, 1973-74, ஆகிய வருடங்களில் திட்டங்கள் எதுவும்எடுத்துக் கொள்ளப்படவில்லை. வரப்போகிற நிதியாண்டுகளில் திட்டங்களை எடுத்துக்கொள்ள முயற்சி மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. த. சோனையா : நரிக்குடிப் பகுதி வறட்சிக்கு பெயர்பெற்ற பகுதியாகும். அங்கு தண்ணீர் சமீபத்தில் கூட கிடைப்பதில்லை. அந்த நரிக்குடி ஒன்றியத்தில் தண்ணீர் எடுக்க மூன்று நான்கு மைல்கள் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அப்படி மூன்று நான்கு மைல்கள் சென்று தண்ணீர் எடுத்து வரவேண்டியிருப்பதால் பெண்கள் தலையில் இருக்கிற முடிகள் எல்லாம் உதிர்ந்துபோய் பொட்டல் விழுகிறது என்று சொல்லப்படுகிறது. எனவே அந்தப் பகுதிக்கு உடனடியாக வருகிற ஆண்டிலாவது அரசு குடிதண்ணீர் வழங்குவது பற்றி ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இத்திட்டம் மத்திய அரசு ஒத்துக் கொள்கிற அடிப்படையில் மட்டும் நிறைவேற்றப்படுகிற ஒரு திட்டமாக அமைந்து விட்டது. ஆனால் உள்ளாட்சித் துறை மூலம் எந்தெந்தக் கிராமங்கள் உடனடியாகக் கவனிக்கப்படவேண்டுமோ அந்தப் பகுதிகளுக்கு தண்ணீர் வழங்குவதற்கு ஒரு தனித் திட்டம் இருக்கிறது. ஒன்றியத்தில் அதற்காக ஆண்டு ஒன்றுக்கு 20,000 அல்லது 30,000 ரூபாய் செலவிடப் படுகிறது. அத்திட்டத்தின் மூலம் எங்கு மிக நெருக்கடியாக இருக்கிறதோ, எங்கு அதிகமான பாதகம் இருக்கிறதோ, அந்தப் பகுதி கவனிக்கப் படலாம். பரவலாகப் போடுகிற திட்டங்களுக்கு ஏராளமான தொகை